ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி

ஸம்ரக்ஷிணீ

ஸம்புடம் 5] [ஸஞ். 11



சித்ரபானு கார்த்திகை

1942 நவம்பர்

546

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 DEC 42

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1942
MADRAS

ஜீவித சந்தா ரூ. 50-0-0

வருஷச் [மாதப் பத்திரிகை.] சந்தா 1-8-0

ஸம்பாதகர்—பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசாரியர்

S. No........ சந்தா நெ........

JL
Q2mm21;113555
N42.5.11.
210854

SRI SAMRAKSHINI OFFICE, THILLAISTANAM, B.O.

விஷய அட்டவணை.

1 திருமுட்டம் [ஸ்ரீ S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M.A. L.T.] 209–212
2 எனது இன்பக்கனவு [ஸ்ரீ ராஜலக்ஷ்மி மாதவய்யங்கார்] 213–216
3 ஸ்ரீ யாதவாப்யுதயம் [ஸ்ரீ A.V. கோபாலாசாரியர் [M.A. B.L. 199–214
4 அனுபந்தம்: ஸ்ரீதேசிகமணிசதகம் (தேவநாகரி) (சிருங்கட்டூர் S. N. ஸ்ரீ ராமதேசிக சிரோமணி) 3–4
5 ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் [ராப்புர்] 2
6 அனுதாபம் (ஸம்-கர்) ஷை 3
7 செய்தி, வினாவிடை ஷை 4

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

சென்ற ஸம்ரக்ஷிணியில் ஷை நாடகத்தைத் தமிழில் வரும் மார்கழிமாதத்தில் நடிக்கவேண்டுமென்று ப்ரசுரித்திருந்தோம். அதுகண்டு திருப்பதியிலிருந்து ஸ்ரீராமதேசிக சிரோமணியும், பங்களூரிலிருந்து ஸ்ரீமான் கொடியாலம் துரைஸ்வாமி அய்யங்காரும் தாங்கள் ஷை நாடகத்தில் ஒ[illegible]பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு நடிப்பதாகக் கடிதங்[illegible] அனுப்பியது மிக்க சந்தோஷத்தை அளிக்கின்றது. ஸ்ரீ[illegible]யாணபுரத்திலும் தில்லைஸ்தானத்திலுமுள்ள பரம ரஸிகர்களான நம் ஸுஹ்ருத்துக்களும் நடித்து நடத்திவைப்பதாக பூர்வாப்யாஸமும் செய்துவருகிறார்கள். ஸ்ரீரங்கத்திலிருந்தும் சில ரஸிகர்கள் நடிப்பதாக வாக்களித்தார்கள். ஸ்ரீ ரங்கத்தில் 'இக்ஷ்வாகூணாம் குலதனமிதம் ரங்கதாம்யாதிரங்கம் இக்ஷ்வாகுவம்சத்தினரின்குலதனமான ஸ்ரீரங்கம், ரங்க (நாடகசாலை)மாகின்றது' என்று ஸ்ரீதேசிகமணி அருளியபடி நடத்துவதாக முயற்சித்ததில் ஸ்ரீபெரியபெருமாளின் உத்ஸவமே அரசாங்கத்தால் தடைப்பட்டிருப்பதால் அங்குள்ள பிரமுகர்களின் அனுத்ஸாஹத்தைக்கண்டு அப்பிரவிருத்தியை நிறுத்திவிட்டோம். நம் ஸம்ரக்ஷிணீ ஸ்தானமாகிற தில்லைஸ்தானத்திலேயே நடத்துவதாக தஞ்சை வக்கீல் ஸ்ரீமான் கல்யாணபுரம் என். கிருஷ்ணமாச்சாரியர் முதலிய ப்ரமுகர்களின் அபிப்பிராயத்தை அனுஸரித்துத் தீர்மானித்திருக்கிறோம். தேதியை ஸமாசாரப் பத்திரிகைகளாலும் துண்டு ப்ரசுரங்களாலும் பின்பு வெளியிடுகிறோம். தஞ்சையிலும் காவிரிக் கரையின்அழகிய அக்ரஹாரங்களிலுமுள்ள ஆஸ்திகர்களும் அச்சமயம் வரவேண்டுமென வேண்டுகிறோம்.

OFFICE OF THE ... MADRAS 15 DEC 1942

திருமுட்டம்.

(S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M. A., வித்வான் L. T.)

—:O:—

'கட்டங்கள் தீர்த்தென்றும் கண்ணன் கழல்சேர்க்கும் முட்டம் நினையாரை முக்காலுநினையோமே' ஆதவன் கிரணங்கள் வெம்மையுடன் விழுகின்றன. கண்ணுக்கெட்டிய வரையில் அதிகமாய் பசுமை காணும். பரந்த வெட்டவெளி. நீல்வானமும் பூமியும் ஒன்றுக்கொன்று உசாவுவதுபோல் தோன்றியது. ஜயங்கொண்டசோழபுரத்திலிருந்து செல்லும் சிதம்பரம் சாலையில் நடந்து வந்தேன். இடையிடையே ஆலமரங்களின் அருநிழலிற் சிறிது இளைப்பாறிப்பைய, நடந்தேன். திருமுட்டம்!! திருமுட்டமென்ற திவ்ய நற்பதியே நினைவிலூன்றியிருந்தது. மரங்களிடையே வானையளாவிய திருக்கோபுரம் கண்பட்டது. விழுந்து தொழுதேன். தொழுது எழுந்தேன். என் உடல் புளகாங்கிதமாயிற்று. என் ஆத்மபந்துவான் 'ஸ்வாமி' என்னைத்தழுவி நின்றார். 'வத்ஸா! வா! ஆச்சர்யம். இங்கு எங்குற்றாய்! இவ்வழி நீயறியாததாயிற்றே' என்றார். இவ்வினியாருடன் பேசவேண்டியதெல்லாம் பேசிவருங்கால் ஸாயங்காலமாயிற்று. இனிய மந்தமாருதம் வீசிற்று. ப்ரம்மாண்டமான திருத்தேரடியில் வந்துசேர்ந்தோம். திவ்ய ரதத்தை ப்ரதக்ஷிணம்செய்து ஸ்வாமி நமஸ்கரித்தார். பக்கலில் நின்று பார்த்தேன்! விந்தையிலும் விந்தை!! எவ்வளவுபெரிய திருநிலை வாயிலும் திருக்கோபுரமும் எதிரில் திருவீதியும். நான் பெருமகிழ்ச்சியுற்றேன். ஸ்வாமி 'கண்ணே! நாம் இதுகாறும்கண்ட திவ்ய தேசங்களையெல்லாம் மறக்கச் செய்யும் இந்தத் தலம்! அங்கெல்லாம் எம்பெருமானது மாபெரும் மாண்பையன்றோ கண்டோம்! இங்கு எம்பெருமான் மனிதருக்காகத் தன்னைத்தாழ்த்தியதை நினைந்தால் என்றைக்கும் ஏழேழ்பிறவிக்குமிரங்கலாம்! ஒரு தலத்தில் மணக்கோலமாயிருப்பான். மற்றோர் தலத்தில் அங்கண்மாஞாலத்தரசர் பணிய வீற்றிருப்பான். இன்னுமோரிடத்தில் ஸ்ரீவைகுண்டத்தின் சாயையாகத் திருக்கொலுக்கொள்வான். ஈண்டோ! ஈண்டோ!!' அவர் குரல் தழதழத்து நின்றது. நான் திக்ப்ரமை கொண்டவன்போல் கோபுரத்தையும், எல்லாத்திருநிலைகளிலும் நின்று புன்முறுவல் பூத்தகோயில் காப்பார் உருவங்களையும், கண்டு, வியந்து நின்றேன். திருக்கோபுர

வாயிலில் நல்லகாற்று வீசியது. ஸ்வாமியின் பாலன்னமேனியெல்லாம் துளித்த முத்தன்ன வியர்வையடங்கிற்று. செந்தாமரைக் கண்களில் எழுந்த கண்ணீரூற்றைத் துடைத்த வண்ணம் 'இங்கு எம்பெருமான் ஓர் பன்றியாய் நிற்கிறான். பெற்றகுழந்தைகளுக்காகத் தாய் படாதபாடு என்ன! எடாத கோலமென்ன! பார்மகளை ஹிரண்யாக்ஷன் எனுமரக்கன் கடலின் அடியில் சுருட்டிச்சிறையிட அவளது பயந்த கண்களொன்றுக்கே தோற்றவனாகித் தானும் கடலிற் பன்றியுருவாய்ப் புகுந்து அவளைத்தன் கோட்டிற்கொண்டு மீட்டபரமதயாளு வஸிக்கும் இடம் இது. எல்லோருடைய பாபத்தையும் திருடித்தொலைப்பதால் இதற்கு முஷ்ணம் என்று வடமொழியிற் பெயராயிற்று. 'முஷ்ணாதி பாதகம் ஸர்வம் தஸ்மான் முஷ்ணமிதீரிதம்' ('முஷ்ணாதி பாதகம் ஸர்வம் தஸ்மான் முஷ்ணமிதீரிதம்') என்று புராணம் ஹிரண்யாக்ஷனைக் கொன்று ஸ்ரீ வஸுந்தரையின் தோள்மணந்த கோலமாக இங்கு வீற்றிருக்கிறான்' என்றார் ஸ்வாமி. உள்ளே நுழைந்தோம். வானளாவிய மதிலைக்கண்டோம். ஓர் சிறு ஸந்நிதியில் எழு பெண் பதுமையைக்கண்டேன். என் கேள்விக்குக் காத்திராத ஸ்வாமி 'வத்ஸா! இத்தலம் பல க்ரோசம் சதுரமுள்ளது. கடற்கரையில் ஓர் முனிவர் கையில் குழந்தையாக ஸ்ரீகமலை வளர்ந்து வந்தாள். அவளது அழகையும் அவளது மொழிஇனிமையையும் கண்டு அவளுக்குக் கிள்ளையென்றும் பெயருண்டு. அவளை எம்பெருமான் மணந்த காலத்துத் தோழியராய் உடன் வந்த ஸப்தகன்னிகள் அவளை விட்டுப்பிரியாது இங்கு நிற்கிறார்கள். வா' என்று அழைத்துச் சென்றார். இறைவனின் முன்மண்டபத்தில் அழகிய நான்கு அரசர் உருவம் நின்றது. பெரியார் ஆரம்பித்தார். 'விஜயநகரத்துநாயக மன்னனொருவன் தீரா வயிற்றுவலியால் வாடி ஸ்ரீரங்கம் வந்து திருவரங்கனைச் சரணடைய அவ்வெம்பெருமான் அவன் கனவில் 'அப்பா! நமது முட்டமென்ற திருவீட்டிற்கு வா!' என்றார். அரசன் அங்குவந்து வழிபட ஓரிரவில் ஓர் வெள்ளைப்பன்றி தன் இருவிலாவிலும் திருவடிகளால் தடவித் தீண்ட வயிற்றுநோய் அறவே நின்றதைக்கண்டான். உடனே வானோங்கு மதிட்களும் மண்டபமும் கட்டி வழிபட்டான். இதோ பார்' என்று ஓர் சிலையுருவைக் காட்டினார். அவ்வுருவின் இரு விலாவிலும் ஐந்து அடையாளங்கள் விளங்கின!

விளங்குகின்றன! ஸ்வாமி மனமுடைந்து அழுதார். 'யந்ராஃ பஶ்யதி சே நாயம்' என்றார். அவ்வுருவின் திருவடியில் தலைசாய்த்துச் சிறு குழந்தைபோல் அழுதார். அவ்வுருவை ஆபாதசூடம் தடவினார். 'இரு! பக்தி பஞ்சரமே! பாவன ஸ்வரூபமே! உன் செங்கோலையும் திருமுடியையும் கழற்றிச் செய்யதாமரைக்கண்ணனே முதல் என்று வழிபட்டாயே! நீ வாழி' என்றார். பிறகு உள்ளே சென்றோம். சென்ற உடனேயே வியப்பாலும் அன்பாலும் என் மனம் கரைந்து ஸ்வாமியைப் பார்த்தேன். 'மஹனீயரே! ஸ்ரீ ஆராத அமுதம் குடந்தையிலிருந்து இங்கு எழுந்தருளிவிட்டதோ! இது என்ன ஆச்சர்யம்' என்றேன். பெரியார்-வத்ஸா! அவன்தான் இவன். இவன்தான் அவன். அவன்தான் எங்கும்! ஆகிலும் ஸ்ரீஆராவமுதனை அதிகம் ஒத்து நின்ற இம்மூர்த்தி ஸ்ரீயக்ஞ வராகன் என்பர். இவனது வடிவைக் கண்ணாற்காணும் நீயே தெரிந்துகொ[illegible]ம். நான் பேசும் நிலமல்ல. இத்தகைய வடிவழகும் அதற்கேற்ற புன்சிரிப்பும் மிடுக்கும் அருளும் பிராட்டியாரது ஒற்றுமைப்பட்ட திவ்ய குணரூபங்களும் மனதிற்கு அத்யாச்சர்யமாயிருக்கிறது. அதனால்தான் திவ்ய மூர்த்திகள் ஸ்வயம் உண்டானதாக மிகவும் தொன்மையான ஐதிஹ்யம். 'ஶாந்தஶ்ஶ்யாமகயா வா ஸ்யாத் கஸ்ய ராஜீவஸ்ய ஸம்பவ:' என்பது இம்மாமணிவண்ணனுக்கே பொருந்தும்! காளிதாஸனது ச்லோகம் இத்திவ்ய மூர்த்திக்குத்தான் தகும். அதோபார்! மூலஸ்தானம்! கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம் என்றபடி இடுப்பில் வைத்த திருக்கைகளும் உலகெலாம் வியக்கும் வீராட்டஹாஸமும் முன்னிமிர்ந்த திருமார்பும் தோன்ற ஸ்ரீகோலவராக நாயனார் ஸேவை தந்தருளுகிறார். பெரியவர் 'அப்பா! அப்பா! அமரர்கள் அதிபதியே! என் கருணாநிதியே! நீ பன்றியான நீர்மையே! 'பாசு தூர்த்துக்கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்...மானமிலாப் பன்றியாய்' என்று எங்கள் ஆண்டாள் வயிறுபிடித்துக் கரையுமாறு நீ நிற்குங்கோலமே! என் *கோலமே கொண்ட உருவுடன் நில்லாது கோரைக்கிழங்கும் உணவாகக்கொண்ட அருமையே! முட்டத்து முக்கியனே! மூவாமுதலே! முனிவர் தம் வாழ்வே! வாழி வாழி வாழி! நின் செல்வம் வாழி!' என்று இனிய குரலில் பல்லாண்டுடன் தன் துதியை முடித்தார் அத்தூயார்.

* கோலம் = பன்றி

வெளிமதிட் பக்கலில் ஓர் கோயில் குறுக்கிட்டது. பெரியார் ஆரம்பித்தார். அவர் குரல் தீனமாயிற்று.' 'உலகம் தெளிந்த ஞானமுடையதல்லவே! வாஸுதேவ: ஸகலஜீதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:' (ஸுதுர்லப; என்று பலதரம் சொன்னார்.) அப்பா சோழராஜன் பரம சைவன். இவ்வெம்பெருமானின் பெருமையையும் அவனது திருவையுங்கண்டு வியந்து மனம் மருகி இப்பெரிய திருக்குளத்தைத்தூர்த்து ஓர் சிவாலயமாக்கினான். குளம் சிவாலயத்தைச் சார்ந்தது என்றும் பறையறைவித்தானும். குளம் முழுவதும் ஸ்ரீவராகநாயனாரது திவ்ய லீலைகளன்றோ பொறிக்கப்பட்டதாய் நின்றன. அது எப்படி வெளிப்படையாய் வேறு ஆலயத்தைச்சார முடியும்? அரசனது காலத்திலேயே மக்கள் தெரியாமலும் தெரிந்தும் ஸ்ரீகோலப்பெருமான் வழிபாட்டிற்குறையாமல் நின்றாராம். திருக்குளத்திற்கும் ஸ்ரீவராகப்பெருமான் திவ்யாலயத்திற்கும் இடையில் இன்றும் சிவாலயம் நிற்கிறது. நின்றால் என்ன. வேண்டுதல் வேண்டாமையில்லாத வேந்தர் வேந்தனான ஸ்ரீதிருமாலின் திருவுள்ளம் மகிழுமேயன்றிக் கலங்காது. அப்படியிருந்தும் ஸ்ரீஸுதர்சனாழ்வார் திருவுள்ளங்கலங்கிச் சிறிது எம்பெருமானின் திருக்கைகளில் நகருவதற்குக் கிளர்ச்சி செய்ததாகவும் எம்பெருமான் புன்னகையுடன் அவரைப்பழைய மனப்பான்மைக்குக் கொணர்ந்ததாகவும் சொல்லுகிறார்கள். ஸ்ரீயக்ஞவராகனின் திருக்கைச்சக்கரமும் இவ்வைதிஹ்யத்தை உண்மையாகவே காட்டுகிறது. ஸ்ரீஆராவமுதாழ்வானது சக்கரம்போல் தோளைச்சாராமலும் ஸ்ரீகூடலூரப்பனதுபோல் முழுப்பிரயோக நிலையிலுமில்லாமல் நடுநிலையில் இருக்கிறது. என்னவோ உலகம்! வாஸுதேவம் பரித்யஜ்ய யோऽந்யம் தேவமுபாஸதே । த்ருஷிதோ ஜாஹ்னவீதீரே கூபம் வநதி துர்மதி:' என்ன கேட்டேன்? அதோ அச்வத்த ரூபியான நாராயணன். குழந்தாய், இப்படி இவன் செய்த எளிவரவெல்லாம் நம் வாழ்விற்கே! இப்படி யாவரும் ஏச நம் இதமே கணிசிக்கும் ஸ்ரீமந்நாராயணனின் கருணையே கருணை. ஆகையால் கண்ணே சொல்லு. 'முட்டம் நினைந்தக்கால் மூவினையும் பாழாமே' என்று இனிய குரலில் முடித்தார். 'இவ்வவதாரத்திற்கு மானமில்லாதாற்போலே உபமானமுமில்லை' என்று ஸ்ரீதேசிகமணியின் ஸ்ரீ ரஹஸ்யசிகாமணி.

எனது இன்பக் கனவு

(ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, மாதவய்யங்கார்.)

இன்று என் தேகத்தின் சக்திக்குறைவும், மனதின் பலஹீனமும் ஒன்றுகூடிக்குலாவியது. எண்ணிய காரியங்களுக்கெல்லாம் தடங்கல் நேரிட்டது. களை எடுக்காத உத்யானவனம் போல் சிதரிக்கிடந்தது உள்ளம். விவேகமும் பொருமையும் இருந்தவிடந்தெரியாமல் மறைந்தது. அஹங்காரமமகாரங்கள் தலை எடுத்தது, இவைகளின் பயன் துக்கம் நெஞ்சையடைக்க கண்ணீர் ஆருய்ப்பெருகியது. நம்மாழ்வார் திருவாய்மொழியின் ஆரம்பத்தில்-

'நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து-இறைசேர்மின்
உயிர்க்கதநேர் நிறையில்லை.'

அதாவது நீங்கள் உங்களுடையது' என்னும் அஹங்காரமமகாரங்களை மறுபடியும் துளிர்க்கவொட்டாமல் வேருடன் களைந்தெரியுங்கள். அவைகள் ஆத்மாவை ஓடி ஓடிப் பல பிறப்பும், இறப்பும், பிணியும், மூப்புமாய் துன்புறுத்தும் வல்லமை வாய்ந்தன. அதைத்தீர்க்கும் அருமருந்து எம்பெருமான் திருவடித்தாமரைகளல்லது மற்றொன்றில்லை. ஆதலால் ஸர்வலோகசரண்யனாகிய ப்ரபுவை அடைக்கலமடையுங்கள். ஆத்மாவிற்கு பரமஹிதமும் பிரியகரமுமாகிய ஸகல நன்மைகளையும் பயக்கும் உபாயம் அதுவே. அதற்கு ஒப்பும் உயர்வும் வேறெதுவுமில்லை. ஸம்ஸாரஸாகரத்தைச் தாண்டுவிக்கும் த்ருடமாகிய பாலம் சரணாகதி ஒன்றே. நீங்கள் உங்களுடையவைகளென்றெண்ணும் ஸகல வஸ்துக்களையும் எம்பெருமான் சொத்துக்கள் என்பதை எண்ணி, அவனிடமே ஸமர்ப்பியுங்கள் என்றும்

'உள்ளம் உரைசெயல் உள்ளவிம்மூன்றையும்
உள்ளிக்கெடுத்து இறைஉள்ளிலொடுங்கே.'

கருத்து:— புருஷோத்தமனை ஆராதிக்க எவ்வித ஸாதனங்களும் இல்லையே எனச்சிந்திக்கவேண்டாம். நீங்கள் ஜனிக்கும்பொழுதே கருணைக்கடலாகிய அவ் வெம்பெருமான் கொடுத்துதவியிருக்கும் சரீரம் இந்திரியங்கள் முதலியவைகள்

அவனைப் பஜித்து கடைத்தேருவதின் பொருட்டேயன்றோ? அவ்விஷயத்தை நீங்கள் அடியுடன் மறந்து உண்பதும், உடுப்பதும், பருகுவதும், பார்ப்பதுமாகிய அனித்திய வியாபாரங்களிலேயே புத்தியைச்செலுத்துகிறீர்கள். அவைகளைத்தவிர்த்து மனோவாக்காயங்களை ஸர்வேச்வரனிடத்திலேயே நிலைநிறுத்துங்கள் மனதினால்பகவத்கல்யாணகுணங்களைச் சிந்திப்பது. வாயினால் அவன் திவ்ய திருநாமங்களைப்பாடுவது. சரீரத்தினால் அவ்வெம்பெருமானை வணங்குவது, செவியினால் அச்சுதன் ஆச்சர்ய சரித்திரங்களைக் கேட்பது, முதலியவைகளைச் செய்து கடைத்தேரும் மார்க்கத்தை கைப்பிடியுங்கள் என்றும் பலவாறாக உபதேசித்தார். பகவத் விஷயத்தை ஸதாசார்யர்களிடம் காலக்ஷேபம் செய்ததில் குறையில்லை. ஆச்ரயிக்கும் உபாயம் அணுவளவும் விளங்கவில்லை. அஹங்காரமமகாரங்களை வேரறுத்து உள்ளத்தை பகவானிடம் நிலைநிறுத்தும் வகை எவ்விதம்?

கொஞ்சம் தலையை வலித்தால் ஐயோ எனக்கும் வருமா? நான் அனேக ஸத்கார்யங்களைச் செய்தேனே ச்ரேயஸ் ஒன்றும் காணோமே. மிகவும் ஜாக்கிரதையாய் இருந்தேனே என்றும் எண்ணம் விடவில்லை. யாராகிலும் நீசெய்யும் காரியங்கள் மிகவும் ச்லாக்யம். உன் பெண்ணைப்போல் குணவதி உலகிலில்லை. உன் புதல்வன் ஸத்குணசீலன், மஹா மேதாவி, உன் பேரப்பிள்ளை புத்திசாலி என்று கொண்டாடினால் ஆனந்தம் பொங்குகிறது. அதற்கெதிரிடையாக உனக்கு அதிர்ஷ்டக்குறைவு. உன் புதல்விக்கு அடக்கம் ஒடுக்கம் போதாது. உன் புத்திரனுக்கு வித்யை மூளையில் ஏறவில்லை. என்னும் வேண்டாச்சொற்களைக்கேட்டால் வருத்தம் தாங்கவில்லை. ஆப்தர்களின்பால் அதிகஅன்பும் பாசமும் பெருகுகின்றன. அதை அவர்கள் ஆதரித்தால் உள்ளம் அடையும் பூரிப்புக் கூறத்தரமல்ல. அனாதரித்துக்கூறும் ஒருசிறு சொல்லும் உள்ளத்தில் முள்ளாய் தைத்து வருத்துகிறது. இன்பமளிப்பதும், துன்பந்தருவதும் மனமே என்று தெரியாமலில்லை. நினைத்தகாரியம் கைகூடினால் உள்ளம் அமைதியும் சாந்தமும் குடிகொண்டு இன்பக்கடலில் மூழ்குகின்றது. எண்ணம் ஈடேறாவிடில் சோகக்கடலில் அலைமோதுகின்றது. சக்தியற்ற நம்மால் ஆகக்கூடியதொன்றுமில்லை. ஸர்வேச்வரன்

ஒருவனே ஸத்யஸங்கல்பன். அவன் ஸங்கல்பமிருந்தாலல்லவோ எண்ணிய காரியம் கைகூடும் என்பதையும் அதே மனம் அறிகிறது ஆனால் ‘நெஞ்சமே நல்லை நல்லை’ என்றும்வார் அருளிச்செய்த ப்ரகாரம் என் நெஞ்சம், கூடியவரை அஹங்காரமமகாரங்களைப்போக்கி தெளிவடையுமாறு செய்யவல்லது ஸதாசார்யானுக்ரஹ மல்லது வேறில்லை. அவ்வள்ளலை வேண்டு எனக்கட்டளை யிட்டது. உடனே அதின் வார்த்தையை மறுதளிக்காமல் ‘என் அப்பனே, என்னை ஆண்டவனே காவேரி கங்கை முதலிய ஜீவநதிகளிலிருந்து வெட்டிவிடப்படும் எக்காலமும் குன்றாத கால்வாய் பெருக்கைப்போன்றதல்லவோ ஆசார்யனுடைய கருணைவெள்ளம். அதை அடியாள் மேலும் பாயுமாறு செய்யத்திருவுள்ளமில்லையோ, ஸத்க்ரந்தங்களை வாசித்தாலும், மஹான்களிடம் நல்வார்த்தை கேட்பினும் ஆசரிக்கும் சக்தி கடுகளவும் இல்லையே, என்ன செய்வேன்; என்மேலிரக்கங்கொண்டு ஸத்புத்திபுகட்டி யருள வேண்டும்’ என்று மனமுருகி முறையிட்டேன்.

என் நற்காலம் இவ்வெண்ணங்களுடன் நல்ல நித்திரையில் ஆழ்ந்தேன். அடாடா என்னசொல்லுவேன். அடுத்த க்ஷணம் எவ்வித ஆனந்தக்கனவு எத்தகைய அற்புதக்காக்ஷி. கண்கள் படைத்த பாக்கியந்தானென்றே. எங்கும் ஓரே ப்ரகாசம். கதிரவன் கிரணங்களைப்போல் தஹிக்கவில்லை. சந்திரன் அமிர்த கிரணங்களைப்போல் ஜ்வலித்தது. பார்த்தால் எதிரில் என்னப்பன், ஸ்ரீமதாசாரியன் திவ்யஸேவை. அவர் திருமுகத்தில் சாந்தம்குடிகொண்டு தைய்விக தேஜஸ் விளங்கியது. திருக்கண்களில் க்ருபாப்ரவாஹம் பொழிந்தது. திருயக்ஞோப வீதமும், திருமண்காப்புகளும், திருக்கையில் விளங்கும்த்ரிதண்டமும், திருமுடியையலங்கரித்திருக்கும்சிகையுடன் மூவுலகின்புண்ணிய பலம்போலும். சரணாகதர்களுக்கு மார்க்கதர்சியுமான தேவரீரை வணங்குகிறேன். ‘உபவீதிந

‘𑌉𑌪𑌵𑍀𑌤𑌿𑌨𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌯𑌫𑌲𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌹𑌸𑍍𑌤𑌮𑍍 ।
𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌸𑌾𑌰𑍍𑌥𑌵𑌾𑌹𑌕𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌶𑌿𑌖𑌯𑌾 𑌶𑍇𑌖𑌰𑌶𑌾𑌲𑌿-
𑌨𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ॥’ ‘உபவீதினமூர்த்வபுண்ட்ரவந்தம் த்ரிஜகத் புண்யபலம் த்ரிதண்டஹஸ்தம் । சரணாகதஸார்த்தவாஹகம் த்வாம் சிகயா சேகரசாலிநம் பஜாமி’

என்றனேகமுறை அடிபணிந்தேன். கண்களாரக்கண்டு களித்தேன். துக்கக்கண்ணீர் ஆனந்தக் கண்ணீராய் மாறியது கரங்கள் தானாகவே சிரமேல் குவிந்தன. மெய்சிலிர்க்க குரல் தழுதழுக்க இமைக் கொட்டாமல் ஸேவித்துக்கொண்டு அசைவற்ற கம்பம்போல் நின்றேன். ஸ்ரீமதாசாரியன் திருமுகத்தில் புன்முறுவல் தவிழ்ந்தது. கம்பீரமும் இனிமையும் பொழிய 'வத்ஸே! ஏன் ஏங்கித் தவிக்கிறாய்? அல்ப விஷயங்களை மஹாமேருவாக எண்ணி வருந்துவது மதியீனம். பொறுமை, தைரியம், அன்பு, சுறுசுறுப்பு, உண்மை, கொடை, இவ்வாறு நற்குணங்களும் உன் உள்ளத்தில் குடிப்புகவேண்டுமென்று அடிக்கடி நான் போதித்ததை அடியுடன் மறந்தாயா'? என வினவினார். நான் மெதுவாய் வணக்கத்துடன் 'ஆம் உபதேசித்தது வாஸ்தவம், ஆனால் காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம் மாத்ஸர்யம் என்றும் இயற்கைவிரோதிகளாகிய ஆறுகுணங்களும் மனதை விட்டகலாமல் நித்யவாஸம் செய்கின்றனவே. அஹங்காரமமகாரங்கள் என்னைவிட்டகலவில்லை. ஆழ்வார் அருளிச்செயல் ப்ரகாரம் ஆச்ரயிக்கும் வண்ணம் அணுவளவும் அறியேன். வாயினால் திருவாய்மொழி பாடும்பொழுதும் கையினால் பகவானுக்குப் புஷ்பந்தொடுக்குந் தருணமும், மனம்மாத்திரம் காற்றிலும்கடியவேகமாய்ப் பறந்து செல்லுகின்றது. வாக்கும், காயமும் ஸுமாராய் சொல்படி செய்கின்றன. மனம் அடங்கவில்லை. அதைத்திருத்த ஆசார்யராலல்லது மற்றெவரால் ஸாத்யம்? என்ன செய்வேன்'? என்றேன்.

என் முறையைக்கேட்ட மஹாதேசிகன் என்னைப்பரிதாபத்துடன் பார்த்து 'ஆம் உன்னால் அவை எவ்விதம் ஸாத்தியம்? ஆழ்வாரும் அவைகளை வெல்லத் தன்னாலும் அஸாத்தியம் எனப்பாடியுள்ளதை மறந்தாயோ?. ஸத்ஸஹவாஸமும் ஸன்மார்க்கப்பயிற்சியும் இடைவிடாமல் இருந்தால் ஜலத்தின் மேல் மிதக்கும் பாசியைப்போல் கொஞ்சம் விலக்கலாம். காற்றையும், ஜலத்தையும், சருகுகளையும் ஆகாரமாக உட்கொள்ளும் முனிவர்களையும் இந்திரியங்கள் ஜயிக்கும் ஸாமர்த்தியமுடையவைகள். அவர்களிலும் மேன்மைபொருந்தியவர்களும், அக்ஞான கந்தமற்றவர்களுமாகிய விண்ணுலகவாஸிகளையும் அஹங்காரமமகாரங்கள் துன்புறச்செய்யும்

தர்மருடைய புத்திரரென்று தந்தையால் இவருக்கு உத்கர்ஷமில்லை. இவரால் தந்தைக்கு உத்கர்ஷம். இந்தயுதிஷ்டிரரால் அவர் மிகப்புண்ணியவான். தர்மதேவதையின் தர்மம் முழுவதும் சேர்ந்தும் இப்பிள்ளையைப் பெறப் போதாது. இன்னும் அதிகப்படி தர்மம் என்ன செய்தாரோ தர்மராஜர். யுதிஷ்டிரேணராஜஸூயத்தில் அச்சுதனைப்பூஜித்து யுக்தத்தில் அச்சுதனாகிறார். கிருஷ்ணனுக்கு யுதிஷ்டிரர் முதல் பூஜை செய்யும் ஸமயத்தில் கிருஷ்ணன் மாதாபிதாக்களின் ப்ரசம்ஸை, தர்மபுத்திரர் பிதாவின் ப்ரசம்ஸை, 'இவன் தந்தை என்னோற்றான்', தர்மபுத்திரர்; நீதான் தந்தை. தூரத்திலிருந்து யாகங்களில் யஜ்வாக்கள் 'ஓ' என்று அழைத்து பரோக்ஷமாக யஜிக்கப்படும் ஹரியே இதோ உன் முன் (பிரத்யக்ஷமாயிருக்கிறார். இப்பூஜ்யருக்குப் பூஜையை ஸமர்ப்பித்து ஸம்ஸார மண்டலமுள்ளவரைக்கும் புவனங்கள் 'ஸாது' என்று பெயர் வழங்கப்பெறுவாய் என்று மாகத்தின் 14-வது ஸர்க்கத்தின் முடிவில் பீஷ்மர் வார்த்தை. 'வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ ந: ஸந்தாரயிஷ்யதி' என்று தர்மராஜர் ப்ரார்த்தனம் செய்வர். 'ஸ ச தர்ம:' அந்த என்பதால் இங்கே ஸதஸ்ஸில் இருக்கும் தர்மராஜனுக்கு வ்யாவர்த்தி.

> இஹ நாகஸதோ ந மாநுஷாஸ்தே
> ய இமே க்ருஷ்ணமிஹார்ச்சயந்த்யநந்யா: ।
> அயமேவ மஹோ மமேதி காயந்
> ஸ ததா மூர்த்த இவாஸ நாட்யவேத: ॥ ௯௩ ॥

> இஹ நாகஸதோ ந மானுஷாஸ்தே
> ய இமே கிருஷ்ணமிஹார்ச்சயந்த்யநந்யா: ।
> அயமேவ மஹோ மமேதி காயந்
> ஸ ததா மூர்த்த இவாஸ நாட்யவேத: 93

(ப-ரை) யஇமே-இந்த இவர்கள் (பீஷ்மாதிகள்) அநந்யா:-கிருஷ்ணமயராய், இஹ-இங்கே, கிருஷ்ணம்-கண்ணனை அர்ச்சயந்தி-அர்ச்சிக்கிறார்களோ, தே-அவர்கள்; இஹ-இந்த லோகத்தில், நாகஸத:-தேவர்கள் (நித்யஸூரிகள்) ந-மா

னுஷா: மானிடரல்ல. அயமேவ-இதுவே, மே மஹ: என் உத்ஸவம், இதி-என்று, காயந்-பாடிக்கொண்டு, ஸ-அந்த நாரதர். ததா-அப்பொழுது மூர்த்தோ நாட்யவேத இவ-வடிவெடுத்த நர்த்தன சாஸ்திரம்போல. ஆஸ-விளங்கினார்.

(தா-ம்) ஸபையிலுள்ள பக்தர்களை நித்யஸூரிக் குழாங்களாக நினைத்து எப்பொழுதும் ஸூரிகள் பார்க்கிறார்கள். என்றபடி இவரை நித்யமும் ஸமீபத்திலேயே பார்த்துக்கொண்டு களிப்போம், கும்பிடு நட்டமிட்டாடி ஆனந்திப்போம் என்று அழைத்தார். இந்த ஸபையில் கிருஷ்ணனை பூஜிப்பவர்கள் மனுஷ்யரல்ல. நித்யமுக்தரான ஸூரிகளே என்று முடிக்கிறார். இப்படி அநந்யராய் 'தமிமம் ஸர்வஸம்பந்நம் ஆசார்யம் பிதரம் குரும்' என்னும் ஆகாரங்களோடு 'இங்கு அறிபவன் அம்ருதன்' என்னும் சுருதியை நினைக்கிறார். இஹ என்கிற பதத்தினால் இங்கு பூஜிப்பவர்கள் இங்கேயே தேவர்கள் என்றாகிறது. சுருதியைப்போல் இரண்டிடத்திலும் அந்வயிப்பது. நாகம் என்பது பரம பதத்தையும் சொல்லும். நாட்யவேதம் என்னும் சுடராய் ஜ்வலித்தார். 'தபஸ்ஸ்வாத்தியாய நிரதர்' நாட்யவேதமேயாகிவிட்டார். 'உபவேதம் உதாரதி:' பரதமுனியின் உபவேதம்.

𑌅𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌿𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌶𑍍𑌰𑍈𑌃
𑌅𑌵𑌿𑌸𑌂𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌾𑌗𑌮𑍋𑌕𑍍𑌤𑌿𑌦𑍇𑌶𑍈𑌃 ।
𑌵𑌿𑌨𑌯𑌾𑌦𑌵𑌨𑌮𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑌰𑍍𑌤𑍁𑌃
𑌸𑌹𑌦𑍇𑌵𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌹𑌰𑌤𑍍𑌸𑌪𑌰𑍍𑌯𑌾𑌂 ॥ ௯௪ ॥

அபிநந்திதவ்ருத்திரார்யமிச்ரை:
அவிஸம்வாதிபிராகமோதிதேசை: ।
விநயாதவநம்ய விச்வபர்த்து:
ஸஹதேவ: ஸ்வயமாஹாரத் ஸபர்யாம் ॥ 94

(ப-ரை) ஆகமோதிதேசை:-வேதோக்தமான பொருள்களில் அவிஸம்வாதிபி:-வேற்றுமையில்லாமல் முழுஉறுதியுள்ள, ஆர்யமிச்ரை:-பூஜ்யரான பெரியோரால், அபிநந்தித

வ்ருத்தி:-நன்கு புகழப்பட்ட, ஸஹதேவ:-ஸஹதேவன், விநயாத்-வணக்கத்தினால், அவநம்ய-நமஸ்கரித்து, விசவபர்த்து:-லோகநாயகனுக்கு, ஸபர்யாம்-பூஜையை, ஸ்வயம் ஆஹரத்-தானே கொண்டுவந்து ஸமர்ப்பித்தான்.

(தா-ம்) 'எதைச்செய்வதை ஆர்யர்கள் பிரசம்ஸிப்பரோ அது தர்ம'மென்பர். இங்கு ஆர்யமிச்ராபிநந்தனம் பெற்ற தர்மமென்கிறார். 'ஸர்வே ஸம்மந்துமர்ஹத' என்று பெரியோர்கள் அனுக்ஞையை ஸஹதேவன் கோரினான். அவிஸம்வாதிபி:-குதர்க்கம் செய்யாதவர், ஸ்வயமாஹரத்-பிருகஸ்பதியைக்கொண்டு மர்யாதை செய்விக்கவில்லை.

𑌅𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌸𑌾𑌂 𑌮𑌹𑍀𑌪𑌤𑍀𑌨𑌾-
𑌮𑌨𑍁𑌮𑌤𑍍𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑌮𑍍𑌮𑌤𑍇 𑌚 ।
𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌜𑌾𑌂
𑌸𑌹𑌦𑍇𑌵𑌪𑍍𑌰𑌹𑌿𑌤𑌾𑌂 𑌚𑌶𑌂𑌸𑍁𑌰𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 ॥ ௯௫ ॥

அரஜஸ்தமஸாம் மஹீபதீநாம்
அநுமத்யா முநிமுக்யஸம்மதே ச ।
புருஷஸ்ய பரஸ்ய பூர்வபூஜாம்
ஸஹதேவப்ரஹிதாம் சசம்ஸுரார்யா: ॥ 95

(ப-ரை) அரஜஸ்தமஸாம்-ரஜோகுணதமோகுணங்களற்று ஸாத்விகரான, மஹீபதீநாம்-அரசர்களின், அனுமத்யா-அனுமதியோடும், முனிமுக்யஸம்மதே ச-முக்கியரான முனிகளின் ஸம்மதியிலும், பரஸ்ய-எல்லோர்க்கும் மேலான புருஷஸ்ய-புருஷனுக்கு, பூர்வபூஜாம்-முதல் மர்யாதையை, ஆர்யா:-ஸபை பெரியோர்கள், சசம்ஸு:-கொண்டாடினார்கள்

(தா-ம்) 'வ்யசிகித்ஸந்த ச கேசிதல்ப ஸத்வா:' ஸத்வகுணம் குறைந்த சிலர் ஸம்சயப்பட்டார்கள், என்று 76-ம் ச்லோகம் இங்கே ஸத்வப்ரசுரரான பலர் புகழ்ந்தார்கள் என்கிறார். இவர்கள் பூர்ண ஸத்வர். ரஜஸ்தமோலேசமற்றவர் 'புருஷன்' எல்லோர்க்கும் முன்பேயிருப்பவர் உலகத்திற்கு முன்பேயிருப்பவர். எல்லோருக்கும் பூர்வராயிருப்பவருக்கு பூர்வ பூஜையுசிதமென்பது ரஸம். 'யத் ஆர்யா:

க்ரியமாணம் ப்ரசம்ஸந்தி' என்பது இங்கே நெஞ்சிலுள்ளது.

த்ருணமுக் ப்ரதிமஸ்த்ருணாய மத்வா
ஸ ததா சேதிபதிர்யுதிஷ்டிராதீன் ।
அஜஹத்பருஷோக்திஹேதிஜாலோ
தரசேஷேந்தநவஹ்நிவத் திதீபே ॥ 96

(ப-ரை) ததா-அப்பொழுது, ஸ:சேதிபதி:-அச்சேதி நாட்டு அரசன், த்ருணபுக்ப்ரதிம:-யுதிஷ்டிராதீன்-தர்மபுத்திரர் முதலானவர்களை, த்ருணாய மத்வா-துரும்பாக நினைத்து அஜஹத்பருஷோக்தி ஹேதிஜால:-கடும்வார்த்தைகள் என்னும் ஜ்வாலையையுடையவனாய், தரசேஷேந்தன வஹ்நிவத்-கொஞ்சம்மீந்த விறகிலுள்ள நெருப்புப்போல், திதீபே-ப்ரகாசித்தான்.

(தா-ம்) மிருகத்தைப்போல் மூடனாகையால் தர்மபுத்திராதிகளை புல் என்று நினைக்கிறான். கடுஞ்சொற்களாகிற ஜ்வாலையுள்ள சிறிதுமீந்த விறகில் அணையப்போகும் அக்னியைப்போல் கோபத்தினால் ஜ்வலித்தான். இதனால் அதி சீக்கிரத்தில் இவன் அழிவது ஸூசிக்கப்பட்டது. அஸ்த்ரங்களால் ஜயிக்கமுடியாதெனத் தெரிந்துகொண்டு மர்மச் சேதிகளான சொல்லம்புகளால் துளைக்கத் தொடங்கினானென்று மாகச்லோகத்தை இங்கே நினைக்கிறார். ஹேதிஜால: என்பதால் ஹேதி என்றால் ஜ்வாலை, ஆயுதம் என்றும் பொருள்கொள்ளவேண்டும்.

அஜுகுப்ஸத பூப்ருத: ஸஹிஷ்ணூன்
பரிவாதைச்ச திரச்சகார பார்த்தான் (ந)।
அவமத்ய முகுந்தமர்ப்பகோऽஸா-
விதி திக்க்ருத்ய பிதாமஹம் ஜகர்ஹே 97

(ப-ரை) அஸஹிஷ்ணூன்-க்ருஷ்ணபூஜையைப் பொறுக்காத, பூப்ருத:-அரசர்களை, அஜுகுப்ஸத-நிட்டினான் (அருவருத்தான்). பார்த்தாந-குந்திபிள்ளைகளை, பரிவாதை:-அவதூறுகளால், திரச்சகார-திரஸ்கரித்தான், முகுந்தம்-கண்ணனை, அஸௌ-இவன், அர்ப்பக:-குழந்தை (அறியாதவன்), இதி-என்று, அவமத்ய-உபேக்ஷித்து, பிதாமஹம்-தாதாவான பீஷ்மரை, திக்க்ருத்ய-அவமதித்து, ஜகர்ஹே-வைதான்.

(தா-ம்) தனக்குப் பேரின்பமளித்து தன் திருமார்பில் சேர்த்து அங்கே ரத்னமாகப் பதிந்து விளங்கும்படி இதோ செய்யப்போகும் வள்ளலை அவமதித்து 'அவஜாநந்தி மாம் மூடா:' என்றபடி சிசுவென்றும்பேசி குருவ்ருத்தரான பீஷ்மரை தூஷித்தான்.

அநகோऽயமதந்த்ரித: க்ரியாயாம்
குருபி: சிக்ஷிதசுத்ததீரனேகை: ॥
குருவம்சபிதாமஹ: குதோऽஸௌ
மதிமோஹேன மஹீயஸா க்ருஹீத: ॥ 98

(ப-ரை) அநகோऽயம்-இவர் மாசற்றவரே, க்ரியாயாம்-செய்யவேண்டிய காரியத்தில், அதந்த்ரித:-சோம்பலற்றவர்தான், அனேகை:குருபி:-பல பெரியோர்களால் சிக்ஷித சுத்ததீ:-திருத்தப்பட்டு சுத்தியுள்ள புத்தியுள்ளவர்தான்,

அஸௌ குருவம்ச பிதாமஹ:-குருவம்சத்திற்கு தாதாவான இவர், மஹீயஸா மதிமோஹேந-மிகப்பெரியதோர் மதிமயக்கத்தால் குதோ க்ருஹீத:-ஏன் பிடிக்கப்பட்டாரோ ?

(தா-ம்) பீஷ்மர் மாசற்றவர் அல்லரென்று ஆயிரம் சிசுபாலர்கள் சொன்னாலும் ஒருவரும் மதியார். சிசுபாலனுக்கும் அவர் குற்றமற்றவரென்பதை மறுக்க மனம் வரவில்லை. அவர் ஸத்வ்ருத்தம் ப்ரஸித்தம். சத்ருவும் அவரைத் தூஷிக்கத் துணியான். காரியங்களிலும் விழித்தவர். தவறுதல் செய்யார். அநேகம் பெரியோர்களிடம் தெளியக்கேட்டு தெளிந்த புத்தியுள்ளவர். அநேகம் வ்ருத்தர்களை உபாஸித்த வ்ருத்தர். இந்த வம்சத்தில் ஆசாரங்களை நியமிக்க வேண்டிய வ்ருத்தர்தான். இவர் சொன்னதை இவர் வம்சஸ்தர் கேட்கவேண்டியதே. எல்லாம் பொருந்தியும் இப்படி மயங்கிவிட்டார். 'மஹீயஸா மோஹேந' இவர் மஹான்தான். ஆயினும் இவருக்கு வந்த மோஹம் இவரினும் மஹான் (பெரிது). இவர் என்ன செய்வார்.

𑌅𑌚𑌟𑍈𑌰𑌜𑌡𑍈𑌰𑌨𑍇𑌡𑌮𑍂𑌕𑍈𑌃
𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌰 𑌕𑌿𑌮𑌙𑍍𑌗𑍍𑌯𑌕𑌾𑌰𑌿 𑌮𑍌𑌨𑌮𑍍 ।
𑌅𑌥𑌵𑌾 𑌕𑌿𑌮𑌰𑌾𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌸𑌕𑍍𑌤𑍈𑌃
𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌜𑌹𑌾𑌸 𑌮𑍂𑌢𑌃 ॥௯௯॥

அசடைரஜடைரநேடமூகை:
முனிபிச்சாத்ர கிமங்க்யகாரி மௌனம் ।
அதவா கிமராதிபக்ஷஸக்தை :
அஹமஸ்மீதி முஹுர்ஜஹாஸ மூட: ॥ 99

(ப-ரை) அசடை:-தீம்பற்றவரும், அஜடை:-மூடரல்லாதவரும், அநேடமூகை:-ஊமை செவிடல்லாதவருமான முனிபி:-முனிவரால், அத்ர-இவ்விஷயத்தில் மௌனம்-சும்மாயிருக்கை, கிமங்க்யகாரி-ஏன் அங்கீகரிக்கப்பட்டதோ. அதவா-அல்லது, அராதிபக்ஷஸக்தை:-எதிர்

கக்ஷியில் அன்புள்ளவர்களால், கிம்-ஆவதென்ன ? அஹமஸ்மி-நான் இருக்கிறேன், இதி என்று சொல்லிக்கொண்டு, முஹு:-பலதடவை, ஜஹாஸ-சிரித்தான்.

(தா-ம்) தன்னோடு சேராதவர் சடர், ஜடர், செவிடு ஊமை, என்று இவனெண்ணம். முனிகள் இவ்வகுப்புகளில் சேராதவர்கள் அவர்கள் ஏன் மௌனமாயிருக்கிறார்கள் ? முனிகளுக்கு மௌனந்தானே தகும் என்ற எண்ணமோ அல்லது அவர்கள் எதிர்கக்ஷியில் பக்ஷபாதம் உள்ளவர் போலும். அஹமஸ்மி முஹு:-'அடிக்கடி அஹமஸ்மி, அஹமஸ்மி என்று பாடி ஹர்ஷசரித்ராரம்பத்தில் துர்வாஸமுனி ஸரஸ்வதியை சபிக்கையில் ப்ரம்ஹதேவர் கம்பீரமாக இங்கே ஸபையிலுள்ள மற்றவரெல்லாம் ஏடமூகர் அல்லவே. ஜடர் அல்லவே. ஏனிப்படிக் கோபமென்றுரைத்தார். அவ்வாக்யங்கள் இங்கு கவி நெஞ்சிலுள. 'அஹமஸ்மி' மற்றவர் ஸம்மதியை ஏன் கேட்கவேணும்? நான் ஒருவன் போதாதோ ஆக்ஷேபிக்க இதோ ஆனந்தமயனான க்ருஷ்ணபரமாத்மாவை உபஸங்க்ரமித்து (ஹாஹா) என்று ஸாமம் பாடி அஹமஸ்மி என்று முக்த கீதம் பாடப்போகிறான். 'அஹமஸ்மி' என்று அதை ஸூசிக்கிறார். இக்காவியத்தின் ரஸத்திற்கு அளவுண்டோ. 'பாவா: ஸந்தி பதே பதே' என்று தீக்ஷிதர் புகழ்ச்சியையே நினைந்து களிவோம்.

𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌂
𑌵𑌦𑌨𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌰𑍁𑌷𑌾 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌮𑌾𑌣𑌮𑍍 ।
𑌫𑌣𑌭𑍃𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌂 𑌤𑌦𑌾𑌸𑍀𑌤𑍍
𑌜𑍍𑌵𑌲𑌦𑍁𑌲𑍍𑌕𑌾𑌶𑌤𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 ॥௱॥

பரிவர்த்தஹுதாசனப்ரதீப்தம்
வதனம் தஸ்ய ருஷா விஜ்ரும்பமாணம் ।
பணப்ருத்ப்ரவிபீஷணம் ததாஸீத்
ஜ்வலதுல்காசத துர்நிரீக்ஷநேத்ரம் ॥ 100

(ப-ரை) பரிவர்த்தஹுதாசனப்ரதீப்தம்-ப்ரளயகாலத் தீயைப்போல் எரிவதும், ருஷா-கோபத்தால், விஜ்ரும்ப

மாணம்-கொட்டாவி விடுவதும், பணப்ருத்பிலபீஷணம்-படம்விரித்த ஸர்ப்பத்தோடுகூடிய புற்றைப்போல் பயங்கரமும், ஜ்வலதுல்காசத தூர்நிரீக்ஷநேத்ரம்-எரிகிற பல கொள்ளிக்கட்டைகள்போலப் பார்க்கமுடியாத கண்களையுடையதுமாய், தஸ்ய வதனம்-அவனுடைய முகம், ஆஸீத்-ஆயிற்று.

(தா-ம்) கொள்ளிக்கண்ணென்று நெற்றியிலிருந்து கிருஷ்ணனால் மறைந்தது. முடிவுகாலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் மீது கோபத்தால் பாக்கியுள்ள இரண்டு கண்களும் பல கொள்ளிக்கட்டைகள் எரிவதுபோலப் பார்க்கமுடியாதிருந்தன. ப்ரளயகால நெருப்புப்போல் முகம் காணப்பட்டது. கோபத்தினால் கொட்டாவி-விடுகையில் நாக்கு நாகத்தின் படம் விரிந்ததுபோலும் வாய் பாம்புப் பொந்துபோலும் இருக்கிறது. 'த்ருச்யமானரஸநயா' என்று தீக்ஷிதர் உரை. தாஷண விஷத்தைக் கக்கும் நாக்கு. 'க்ருதஸந்நிதானமிவ தஸ்ய புநரபி த்ருதீயசக்ஷுஷா! க்ரூரமஜனி குடிலம் ப்ருகுடீகடோரிதலலாடமானனம்' என்ற மாகச்லோகம் இங்கே கவி நெஞ்சிலுள்ளது. அடுத்த ச்லோகமும் அப்படியே.

𑌬𑌡𑌬𑌾𑌨𑌲𑌧𑍂𑌮𑌰𑌾𑌜𑌿𑌰𑍂𑌕𑍍𑌷𑌾
𑌭𑍍𑌰𑍁𑌕𑍁𑌟𑍀 𑌤𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑍇 𑌪𑌰𑌿𑌸𑍍𑌫𑍁𑌰𑌨𑍍𑌤𑍀 ।
𑌤𑌦𑍃𑌶𑍇 𑌤𑌦𑌸𑍂𑌨𑍍 𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯 𑌪𑌾𑌤𑍁𑌂
𑌶𑌮𑌨𑍇𑌨𑍈𑌵 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑍀 ॥ ௱௧ ॥

படபானலதூமராஜிரூக்ஷா
ப்ருகுடீ தஸ்ய முகே பரிஸ்புரந்தீ।
தத்ருசே ததஸூன் ப்ரஸஹ்ய பாதும்
சமனேனேவ நிவேசிதா புஜங்கீ ॥ 101

(ப-ரை) தஸ்ய-அவனுடைய, முகே-முகத்தில், படபானலதூமராஜிரூக்ஷா-வடவாக்கினியின் புகைக்கூட்டத்தைப் போல பயங்கரமாக, பரிஸ்புரந்தீ-துடித்துக்கொண்டிருக்கிற, ப்ருகுடீ-புருவமானது, ததஸூன்-அவன் ப்ராணவாயுக்களை, பாதும் உறிஞ்சிவிடுவதற்கு. சமனேன-யமனால்,

நிவேசிதா-வைக்கப்பட்ட, புஜங்கீ-பெண் பாம்புபோல, தத்ருசே-காணப்பட்டது.

(தா-ம்) ப்ரளயாக்னியைப்போல் முகம் மண்டி எரிகிறதென்றார். படபாமுகாக்னியின் புகைக்கொடிபோலிருந்தது துடித்த புருவக்கொடி என்கிறார். இரண்டு புருவங்களின் உருவத்தைப்பார்த்தால் பெண்பாம்புபோல் இருந்தது. நாகம் காற்றை உண்ணும். உயிர்க் காற்றைக் குடித்துவிட யமன் வைத்திருக்கும் பெண்பாம்போ என்று தோன்றுகிறது.'ப்ரயாணகாலே மனஸாऽசலேன பக்த்யா யுக்தோயோகபலேன சைவ। ப்ருவோர்மத்யே ப்ராணமாவேச்ய ஸம்யக் ஸதம் பரம் புருஷமுபைதி திவ்யம்' என்ற கீதாச்லோகம் இந்த மோக்ஷாவஸரத்தில் ஸூசிக்கப்படுகிறது. 'சமனென' எமனுக்கு சமனன் என்று பெயர். 'சித்தவ்ருத்திகளையும் ச்வாஸங்களையும் ஓடாமல் தடுத்த த்ருடயோக பழக்கத்தினால் என்னும் பொருள். சமம் என்பது இந்த்ரிய நிக்ரஹம். 'ஆரூடஸம்ஸ்காரதயா அசலேன மனஸா ப்ரயாணகாலே ப்ருவோர்மத்யே ப்ராணம் ஆவேச்ய' என்று கீதாபாஷ்யம் 'யோகப்ரகரணங்களில் சொல்லியபடி அசையாமல் ப்ராணன்களை நிறுத்துதல்' என்று தாத்பர்ய சந்த்ரிகை மோக்ஷத்திற்காக உத்க்ராந்தி ஸமய ஸூசனமுமுளது.

10854

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௦௨ ॥

பலிதீக்ருதசந்தனானுலேப:
க்வசிதத்ராவித ஹேமபுஷ்பதாமா।
ஸஹஸா ஹ்ருதி தஸ்ய கோபவஹ்நி:
ஸமதி பிஸ்புடிதப்ரகீர்ணஹார:॥ 102॥

(ப-ரை) பஸிதீக்ருதசந்தனுனுலேப:-சாம்பலாக செய்யப்பட்ட சந்தனப்பூச்சை உடைத்தாயும், க்வதிதத்ராவித ஹேமபுஷ்பதாமா-கொதித்து உருகிய தங்கப்பூமாலைகளை உடைத்தாயும், ஸ்புடிதப்ரகீர்ணஹார:-வெடித்தும் இரைந்தும் இருக்கிற முத்துமாலைகளை உடைத்தான, கோபவஹ்நி:-கோபாக்கினி, ஸஹஸா-வேகமாக தஸ்ய ஹ்ருதி-அவன் நெஞ்சில், ஸமதீபி-நன்றாய் எரிந்தது.

(தா-ம்) பின்னாலாகவேண்டியதெல்லாம் உயிருடனேயே முன்னால் நடைபெறுகிறது. கோபத்தீயால் சந்தனம் சாம்பலாகவும் தங்கவடங்கள் உருகியும் முத்துமாலை வெடித்தும் ஆயின.

கடிநௌ பரிபிம்ஷத: கரௌ த்வௌ
பஹுசஸ்தஸ்ய வரோர்மிகா விசீர்ணா ।
த்ருவமப்ரசமாய ரோஷவஹ்நே:
துஷநிக்ஷேபமதத்த ரத்நசூர்ணை: ॥ ௱௩ ॥

கடிநௌ பரிபிம்ஷத: கரௌ த்வௌ
பஹுசஸ்தஸ்ய வரோர்மிகா விசீர்ணா।
த்ருவமப்ரசமாய ரோஷவந்ஹே:
துஷநிக்ஷேபமதத்த ரத்னசூர்ணை:॥ 103॥

(ப-ரை) பஹுச:-பல் கால், கடிநௌ-கெட்டியான, கரௌ-இரு கைகளையும், பரிபிம்ஷத:-கெட்டியாய் பிசைகிற தஸ்ய-சிசுபாலனுடைய, வரோர்மிகா-உயர்ந்த மோதிரம், விசீர்ணா-நொருங்கிச் சிதரிக்கொண்டு, ரத்னசூர்ணை:-ரத்னப் பொடிகளால், கோபவந்ஹே:-கோபத்தீயின், அப்ரசமாய-அணையாமைக்காக, துஷநிக்ஷேபம்-உமிபோடுவதை, அதத்த-செய்தது.

(தா-ம்) இவன் கோபம் இவனையே தஹிக்கிறது. எதிரியை தாக்கமுடியாது. இவன் ஆபரணங்களே நொருங்கிப் பொடியாகின்றன. இவன் கைகளே உயர்ந்த மோதிரத்தைப் பொடியாக்குகின்றன. ஒருகை மற்றொருகையைப் பிசைகிறது. 'வரோர்மிகா' மாப்பிள்ளையென்று கிடைத்த மோதிரமாயிருக்கலாம். நகையை யழிக்க நெருப்பில் வைத்து உமிபோடுவர். 'கரௌ த்வௌ' த்விவசனம் போதுமே. இரண்டென்று, ஏன் சொல்லவேணும். நாலுகைகளோடிருந்தவன். நாலுமிருந்தால் இன்னம் கோரமாயிருக்கும்.

ஸ்வவதாஹததிண்டிமஸ்வநாபா-
நஸக்ருச்சேதிநியந்துரட்டஹாஸான் ।
அபிதோ மணிபித்திபி: ஸபா ஸா
ப்ரஜஹாஸேவ விஜ்ரும்பிதப்ரதிச்ருத் ॥ ௱௪ ॥

ஸ்வவதாஹததிண்டிமஸ்வநாபா-
னஸக்ருச்சேதிநியந்துரட்டஹாஸான்।
அபிதோ மணிபித்திபி: ஸபா ஸா
ப்ரஜஹாஸேவ விஜ்ரும்பிதப்ரதிச்ருத்॥

(பரை) ஸா ஸபா-அச்சபை, அபித:-சுற்றிலும், மணிபித்திபி:-ஸ்படிகசுவர்களால், விஜ்ரும்பிதப்ரதிச்ருத்-மேன்மேலும் கிளம்பிய எதிரொலியை உடைத்தானதாய்க்கொண்டு ஸ்வவதாஹததிண்டிமஸ்வநாபான்-தன் கொலைக்காக அடிக்கப்பட்ட பறையின் ஒலிபோன்ற, சேதிநியந்து:-சிசுபாலனுடைய, அஸக்ருத்-அடிக்கடி உண்டாகிய, அட்டஹாஸான்-பெரும் சிரிப்புகளை, ப்ரஜஹாஸேவ-பதில் சிரித்ததுபோலிருந்தது.

(தா-ம்) 'ஸா ஸபா' அப்பொழுதுதான் மயன் விசித்ரமாக நிர்மித்தசபை. துர்யோதனனையே மாற்றி எல்லாரையும் சிரிக்கச்செய்த சபை. சிசுபாலன் கோடையிடிபோலச் சிரிக்கிறான். சபைச் சுவர்களும் பதில் சிரிக்கின்றன. (எதிரொலியால்) கொலைக்குக் கைதியைக் கூட்டிப்போகையில் பறையடிப்பதுண்டு போலிருந்தன.

𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯 𑌰𑍁𑌷𑌾 𑌵𑌿𑌵𑌰𑍍𑌣𑌭𑌾𑌵𑌂
𑌤𑌮𑌸𑌾 𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑌲𑌙𑍍𑌘𑍍𑌯𑌮𑍈𑌕𑌰𑌾𑌶𑍍𑌯𑌂 ।
𑌉𑌪𑌰𑌕𑍍𑌤 𑌇𑌵𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌽𑌸𑍍𑌤𑌮𑍃𑌚𑍍𑌛𑌨𑍍
𑌸 𑌭𑍃𑌶𑌂 𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑌭𑍂𑌦𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌃 ॥ ௱௫ ॥

ப்ரதிபத்ய ருஷா விவர்ணபாவம்
தமஸா பிப்ரதலங்க்யமைகராச்யம்।
உபரக்த இவார்யமாऽஸ்தம்ருச்சன்
ஸ ப்ருசம் ஸத்பிரபூததர்சனீய:॥ 105 ॥

(ப-ரை) அலங்க்யம்-மீறக்கூடாத, தமஸா ஐகராச்யம்-அக்ஞானத்தோடு (ராகுவோடு) ஒருராசியிலிருப்பதை பிப்ரத்-அடைந்தவனும், ருஷா-கோபத்தால், விவர்ணபாவம்-காந்தியில்லாமலிருப்பதை, ப்ரதிபத்ய-அடைந்து, உபரக்த:-சிவந்தவனும், க்ரஹணம் பிடித்தவனும், அஸ்தம்ருச்சன்-அஸ்தமனத்தையடையும் (நாசத்தையடையும்) அர்யமேவ-ஸூர்யனைப்போல, ஸ:-அவன், ஸத்பி:-ஸாதுக்களால், ப்ருசம்-மிகவும், அதர்சனீய:-பார்க்கத் தகாதவனாக, அபூத்-ஆனான்

(தா-ம்) முகத்தில் சவக்களை வந்துவிட்டது. உருவே மாறிவிட்டது. நகைகள் உடம்பைவிட்டு நீங்கின. சரீரம் சிதையில்போலெரிந்தது. கோபத்தால் உடம்பு கருத்தது இருளோடு ஒரே ராசியாயிற்று. க்ரஹணம் பிடித்த ஸூரியன் இருளடைவதுபோல விருந்தது. க்ரஹணம் பிடித்த உடனேயே, அஸ்தமிக்கும் ஸூர்யனைப்போல ஸாதுக்கள் பார்ப்பதற்குத் தகாதவனாய் இருந்தான். க்ரஹணத்தில் ஸூர்யனையும் அஸ்தமிக்கும் ஸூர்யனையும் பார்க்கக் கூடாது

𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑍈𑌰𑌵𑌿𑌦𑍂𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑍈𑌰𑌿𑌵 𑌤𑌤𑍍𑌯𑌜𑍇 𑌤𑍍𑌰𑌸𑌦𑍍𑌭𑌿𑌃 ।

𑌨𑌿𑌜𑌮𑌂𑌸𑌮𑌰𑌾𑌤𑌿𑌵𑌨𑍍𑌨𑌿𑌜𑌘𑍍𑌨𑍇
𑌪𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍇𑌨 𑌪𑌦𑍇𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌭𑍂𑌮𑌿𑌃 ॥ ௱௬ ॥

ச்வஸிதைரவிதூர விருத்திமத்பி:
பரிவாரைரிவ தத்யஜே த்ரஸத்பி:।
நிஜமம்ஸமராதிவன்னிஜக்னே
பவிகல்பேன பதேன சாஸ்ய பூமி:॥ 106

(ப-ரை) அவிதூரவ்ருத்திமத்பி:-ஸமீபத்தில் வர்த்திக்கும், ச்வஸிதை:-மூச்சுக்காற்றுகளால், த்ரஸத்பி:-பயப்படுகிற பரிவாரைரிவ-பரிஜனங்கள்போல, தத்யஜே-விடப்பட்டான், நிஜமம்ஸம்-தன் தோளை, அராதிவத்-சத்ருபோலே, நிஜக்னே-குத்தப்பட்டது பவிகல்பேன-வஜ்ரம்போன்ற காலால், பூமிச்ச-தரையும், நிஜக்னே-உதைக்கப்பட்டது.

(தா-ம்) மூச்சுக்காற்றுகள் 12 அங்குல தூரத்திற்குள் ஸஞ்சரிப்பனவென்பர்-'த்வாதசாங்குலபர்யந்தசாரிண: ச்வாஸா:' என்ற யோக சாஸ்த்ரவார்த்தையை தீக்ஷிதர் உதாஹரித்தார். கிட்ட ஸஞ்சரிக்கும் ச்வாஸங்கள் கோபப் பெருமூச்சில் தூரம் சென்றன. யஜமானன் ப்ரபல சத்ருவுடன் போர் செய்யத் துடங்குகையில் அருகிலிருக்கும் துர்ப்பல பரிவாரங்கள் தூர அகலுவதுபோல மூச்சுக்காற்றுகள் தூரம் வீசத்துடங்கின. மூச்சுக்காற்று இவனை அடியோடு விடப்போகும் சமயம் பெருமூச்சுகள் கடைசி ச்வாஸம் வாங்குவதுபோலாயின. ஜன்னி முற்றி தன்னையே குத்துவதும் பூமியை உதைப்பதும் போன்ற சேஷ்டைகள்.

𑌨𑌿𑌭𑍃𑌤𑍈𑌰𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍈𑌕𑌮𑌤𑍍𑌯𑌾-
𑌦𑍍𑌵𑌿𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌥 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌨𑌿 ।
[illegible]
[illegible] ॥ ௱௭ ॥

?ப்ருதைரபி பூர்வமைகமத்யாத்
விக்ருதஸ்யாத விருத்தசேஷ்டிதானி।

தநிரே தமகோஷஸம்பவஸ்ய
ப்ரதிபிம்பைரிவ தஸ்ய மித்ரபூதை: ॥ 107

(ப-ரை) பூர்வம்-முதலில், ஐகமத்யாத்-ஒரே அபிப்ராயத்தால், நிப்ருதைரபி-சரியென்று சும்மாயிருந்தவர்கள், தஸ்ய மித்ரபூதை:-அவன் மித்ரரால், தமகோஷஸம்பவஸ்ய-தமகோஷன்மகனான சிசுபாலனுடைய, ப்ரதிபிம்பைரிவ-ப்ரதிபிம்பங்களாலேபோல, விக்ருதஸ்ய-மாறுதலையடைந்த தஸ்ய-அவனுடைய, விருத்தசேஷ்டிதானி-விபரீத சேஷ்டைகள், தநிரே-வகிக்கப்பட்டன.

(தா-ம்) சிசுபாலனிடம் பக்ஷபாதமுள்ள அவன் மித்ரர்கள் இதுவரையில் மற்ற ஸாதுக்களோடு பேதப்படாமல் இருந்தவர்களும் அவன் ப்ரதிபிம்பங்கள்போல அவன் கோபவிகார சேஷ்டைகளைத் தாங்களும் வஹித்தார்கள்-பிம்பத்தின் சேஷ்டைகள் தத்க்ஷணமே ப்ரதிபிம்பங்களில் அப்படியே காணப்படும். ஸ்படிகமணிச்சுவர்களிலும் கம்பங்களிலும் சிசுபாலன் ப்ரதிபிம்பங்களில் எப்படி அவன் சேஷ்டைகளெல்லாம் காணப்பட்டனவோ அப்படியே அவன் தோழர்களிடமும் காணப்பட்டன.

விக்ருதாக்ருதிவேஷசேஷ்டிதாநா-
மவலேபக்ரஹலுப்தமாநஸாநாம் ।
அவதீரிதஜாஹ்நவேயவாசா-
மபஹாஸ: பரமாததே மஹத்பி: ॥ ௱௮

விக்ருதாக்ருதி வேஷ சேஷ்டிதானா-
மவலேபக்ரஹலுப்தமானஸானாம் ।
அவதீரிதஜாந்ஹவேய்வாசா-
மபஹாஸ: பரமாததே மஹத்பி: ॥ 108

(ப-ரை) விக்ருதாக்ருதிவேஷசேஷ்டிதானும்-ஆகாரங்கள் வேஷங்கள் வ்யாபாரங்களிலெல்லாம் தங்களுக்கு ப்ரக்ருதியான சிசுபாலனைப்போலவே விகாரங்களை யடையும் பெற்றவரும், அவலேபக்ரஹலுப்தமானஸானும்-அஹங்காரமென்னும் பேயின் ஆவேசத்தால் தன் மனமிழந்தவராயும், அவதீரித ஜாந்ஹவேயவாசாம்-கங்காபுத்ரர் வார்த்தையைப் பரிஹஸித்தவருமான, (அவர்கள் விஷயத்தில்) மஹத்பி:-பெரியோரால், அபஹாஸ:பரம்-கேவலம் பரிஹாஸச்சிரிப்பே, ஆததே-பற்றப்பட்டது.

(தா-ம்) இவர்கள் முன்பு மற்றவர்களோடு ஒரே மனஸாயிருந்தவராயினும் இப்பொழுது இவர்களுக்குள் அஹங்காரப்பேய் புகுந்து இவர்கள் மனதைக் கொள்ளையிட்டுவிட்டது. அப்பேய் சிசுபாலனுக்குள் புகுந்து அவனையாட்டி வைத்ததுபோல இவர்களையும் ஆட்டிவைத்தது. அந்த ஒரு பேயின் ஆட்டம் எல்லோர் விகாரங்களும் 'விக்ருத' சிசுபாலனென்னும் ப்ரக்ருதிக்கு இவர்கள் விக்ருதிகள் போலும். ஆக்ருதி விகாரங்கள் கண் சிவப்பு முதலியவை. வேஷ விகாரங்கள் கோபோஷ்ணத்தால் மாலை சந்தனாதிகள் உலர்ந்தது முதலியவை. சேஷ்டாவிகாரங்கள் கைகளைப் பிசைதல் முதலியவை என்று தீக்ஷிதர் உரை. 'ஜாந்ஹவேய வாசாம்' ஜாந்ஹவீபுத்ரரின் வாக்ப்ரவாஹத்தை அவமதித்து அட்டஹாஸமாய் சிரித்தார்கள், அதற்குப் பெரியோர்களும் பதில் சிரித்தார்கள். 'உபதேசோ நிரர்த்தக:' உபதேசத்தில் பயனிராது.

உபஹ்ருத்ய ரணாய வ்ருஷ்ணிவீராந்
ந்ருபலோகாதத நிர்ஜகாம சைத்ய: ।
தமமம்ஸத யாதவாஸ்ததாநீம்
அநலஸ்கந்தவிநிஸ்ஸ்ருதம் ஸ்புலிங்கம் ॥ ௱௯ ॥

உபஹ்ருத்ய ரணாய வ்ருஷ்ணிவீரான்
ந்ருபலோகாதத நிர்ஜகாம சைத்ய: ।
தமமம்ஸத யாதவாஸ்ததானீம்
அனலஸ்கந்தவினிஸ்ருதம் ஸ்புலிங்கம் ॥

(ப-ரை) அத-பிறகு, சைத்ய:-சிசுபாலன், ஸமுப-யுத்தத்திற்கு, வ்ருஷ்ணிவீரான்-வ்ருஷ்ணிவம்ச வீரரான யாது கிருஷ்ணாதிகளை, உபஹூய-அழைத்துவிட்டு, ந்ருபலோகாத்-அரசர்கூட்டத்திலிருந்து, நிர்ஜகாம-வெளிவந்தான். ததானீம்-அப்பொழுது, யாதவா:-யதுகுலத்தினர், தம்-அவனை, அனலஸ்கந்தவினிஸ்ருதம்-பெரும் நெருப்பிலிருந்து கிளம்பிய, ஸ்புலிங்கம்-நெருப்புப்பொரியாக, அமம்ஸத-நினைத்தார்கள்.

(தா-ம்) ராஜஸூய யக்ஞத்திற்கு அழைக்கப்பட்டு வந்தான். யுத்த யக்ஞத்திற்கு வ்ருஷ்ணிவீரரை அழைத்தான். இவனுக்கு அந்த்யேஷ்டி வரப்போகிறது. அத என்ற சப்தத்தால் மங்களங்கள் துடக்கம். அந்த சிசுபாலன் மரணமடைந்தாலும் மோக்ஷமடைகிறான். மோக்ஷமென்னும் மங்களம் அடைவதற்கு மரணமும் பெரிய மங்களமான உபாயமே. ஆகையால் மோக்ஷபலாத்யாயமான நான்காவது அத்யாயத்தில் (ப்ரஹ்மஸூத்ரத்தில்) இரண்டாம் பாதத்தில் மரணக்ரமம் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டதென்று ஸ்ரீஸாரா வளியின் அழகிய ப்ரதர்சனம் 'மத்யே வித்யாபலானாம் மரணமபி வதம் ஸ்தத்விதச்சிந்த்யமாஹ' 'நிர்ஜகாம' ராஜலோகத்திலிருந்து லோகாந்தரத்திற்கு நிர்யாணம் வரப்போவதின் ஸூசனம். இவன் மோக்ஷநிர்யாணாதிகாரி. பெருந்தீயிலிருந்து கிளம்பும் பொரிபோலக் காணப்பட்டான். எரியும் தீயிலிருந்து அனல் பொரிகள் எப்படிக் கிளம்புகின்றனவோ என்று முண்டகம். பரஞ்சோதியிலிருந்து கிளம்பிய ஜீவஜ்யோதிஸ் பரஞ்சோதியில் புகவேணும்.

கதிவிஶிஜு ந கா ேவாரவஸ ெ ஙகஃ
உவஸஜா த ெ டிர ஷ ம ஶ ெ ம ஶ ॥
மஜய ெ வஶ தாிவா ஶ ா ெ ஙா
ம தி ெ ர தலு மெ ெ ஙரிவா த ஜ ெ ம ॥

देशिकमणिशतकम् ॥

(திருமங்கலக்குடி S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி)

(अनुवृत्तम्)

अथ वैराग्यपद्धतिः ।

निस्सारसंसारपराङ्मुखं तं सदा हरिध्याननिमग्नचित्तम् । श्रीवेङ्कटेशं श्रितपारिजातं वैराग्यवारां निधिमाश्रयामः ॥ १ ॥ यस्यास्ति वित्तं तृणनिर्विशेषं यस्यास्ति लोकस्तृणनिर्विशेषः । यस्यास्ति वित्तं हरिपादसेवा तं नौमि वैराग्यवतां वरिष्ठम् ॥ २ ॥ यो मन्यते विष्णुपदाम्बुजातसेवासमासादितपुण्यराशिः । स्वं वित्तराजेन समं नमामि विरागिणां मानसराजहंसम् ॥ ३ ॥ वित्तं चलं वित्तपमं विचिन्त्य यो नाकरोत्तत्र चलं तु चित्तम् । स्थिरं मुकुन्दस्य पदे चकार स्थिरं स्वचित्तं तमहं नमामि ॥ ४ ॥ विस्मृत्य देवं वनिताधनादिसुखं सदा सुखयतोऽपि यस्मिन् । भक्तिप्रकर्षे नतिं [illegible] ज्ञाराधयेऽहं प्रमुखं गुरूणाम् ॥ ५ ॥ वित्तस्य साक्षात् प्रतिबन्धकत्वं ज्ञात्वा हरेः पादनिषेवणे तु । यो नाकरोत्तत्र कदाऽपि बुद्धिं तं नौमि तत्त्वार्थविदां वरिष्ठम् ॥ ६ ॥ वित्तं सदा मृत्तिकया समानमितीरितं तत्त्वविदां वरिष्ठैः । समानयत् स्वानुभवं य एव तं वश्यवैराग्यमहं भजामि ॥ ७ ॥ अर्थार्जनार्थपरम्परां तां दृष्ट्वाऽर्थसार्थेन चकार बुद्धिम् । यो लोकविख्यातयशा नमामि तं सार्वभौमं धननिस्पृहाणाम् ॥ ८ ॥ लक्ष्मीश्रितानां न भवेन्मुकुन्दभक्तिः स्थिरेति क्षपयन् प्रथां यः । तद्भक्तिवृद्ध्यै शरणं प्रपेदे तामेव तं नौमि सतां वरिष्ठम् ॥ नारायणस्यांघ्रिसरोजयुग्मज्ञानात्मकं वित्तमवाप्तुकामः । यो लोकविख्यातधनेति हेये नैवाकरोत् चित्तमहं तमीडे ॥ १० ॥ जीवातिरिक्तः पर एव कश्चित् नास्तीति सिद्धान्तयतां सकाशात् ।

[illegible] जीवविरक्तिपूर्वपरात्मबुद्धिस्तमहं नमामि ॥ ११ ॥ देहाति-
रिक्तस्थिरदेहिनं तु विस्मृत्य देहे कथितात्मबुद्धे । चले वसामांस-
मलादिरूपे विनश्वरे व्याधिमये कृतघ्ने ॥ १२ ॥ मायावशात्पाप-
कृतां जनानामात्मवतां स्वार्थमतिं च तत्र । मत्वैव निद्रालसा कल्पेन
यस्य विरागिणां शेवधिमाश्रये तम् ॥ १३ ॥ कर्मानुरूपस्य फलस्य
दाता लोकान्तरे चास्ति तथाऽनुमेका । इतीदृशी बुद्धिरभूज्जनानां
यदीयभक्त्या तमहं नमामि ॥ १४ ॥ एकत्र वासो जनयेज्जनानामाशां
तु तत्रैव सदाऽधिवस्तुम् । एवं हि जीवस्य शरीरवासमोहं व्यनु-
म्पद्य इमं भजामि ॥ १५ ॥ हते शरीरे प्रवदन्ति लोकाः स्वात्मानमेवं
निहतं भ्रमोऽयम् । जीवो ह्यणुर्नास इति प्रकृष्टं तत्त्वं जनेभ्यो दधते
नमो नः ॥ १६ ॥ के वा स्थिताः पूर्वपितामहाद्याः के वा भवन्त्य-
द्य जनिष्यमाणाः । त्वं वा कियत्कालमिह स्थिरोऽसीत्येवं तु तत्त्वं
प्रवदन्तमीडे ॥ १७ ॥ कोऽहं कदा कुत्र मम स्थितत्वं कावत्र माता-
पितरौ सुहृत्कः । क एष संसार इतीह तत्त्वं प्रबोधयन्तं प्रणतोऽस्मि
नित्यम् ॥ १८ ॥ मोमुह्यते मांसवसाविकारं दृष्ट्वा जनः कातरता-
मुपैति । शरीरतत्त्वं त्वविचार्य नूनमितीरयन्तं गुरुमाश्रयामि ॥ १९ ॥
मुकुन्दमायावशमेत्य लोकाः सांसारिकं खेदमवाप्नुवन्ति । इतीव
तस्यापसृतिं चिकीर्षन् हरिं प्रपेदे य इमं नमामि ॥ २० ॥

इति श्रीरामदेशिकविरचिते देशिकमणिशतके
द्वितीया वैराग्यपद्धतिः सम्पूर्णा ।

20854

அனுதாபம்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீசந்திர புஷ்கரிணீ பாடசாலை ஸாஹித்ய வ்யாகரண உபாத்தியாயர் ஸ்ரீ உப. வே மோஹனூர் ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி, நடந்த ஐப்பசிமீ 26உ (11-11-42)ல் ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். இவர் விஷயமான வாசிஶ்லோகங்கள்

ஸம்ப்ராப்தே சித்ரபாநௌ ஶரதி ஶரதி தம் வ்ருஶ்சிகம் சித்ரபா-
நௌ ஶுக்லே பக்ஷே த்ருதீயாயாமபி புததிவஸே ப்ரா-
பதேஷு க்ஷீயமாணே இதராஃ ஶ்ரீகாஶ்யபாந்வயாப்யயநவிது
நியநேது ஜ்யாத்ஸ்ய விஷ்ணோஃ பதம் ஶ்ரீரங்கநா-
யகாத்தஜநாநுகம்பயா ஶ்ரீநிவாஸோ பபேந்து ॥

ஸத்தர்மணி ஹிஜாநுஷ்டஃ ரஸிகஶிவா மணிரயம் ஸாதக-
ஹ்ருஷ்டஃ । வித்யாவிதாரணபரஃ ப்ரியோ ந்ருஸிம்ஹ
ஶிரோமணௌ ச மணௌ ॥ ௨ ॥

ஸத்வ்ருத்தோ ஜ்வ்ருத்திதஃ ப்ரியா வ்ருதஃ ஸ பாவகஃ । ய
ஸ்ரூவஸீ ஸஹ்யஜாவக்த்ரே மந்தே ஹந்த ஶரோரதத்ப்ரஶா ॥

மணீஹாரஷா ரஸ்யவேஷா நிதேரஷா ரஹிதா ரஷா ।
ஶோபீஷ்வேஷ்ய ஸிராஷா ஸா ஶோபீஹந்தா ஶதா திவஞ் ॥

வரிஷ்டதேஹ்யஃ பதீவ ப்ரபாவஸாதாஶதம் பதிஞ் ।
ஸாஹ்யதோஸ்ஸ ஸஹ்யதயஃ கதாத்ருக்ஷ்யா மஹே கந்தஞ்

(ஸம்-கர்)

அறிவிப்பு.

ஸம்ரக்ஷிணீ ஸம்ரக்ஷகர்களான ஸஹ்ருதயர்கள் ஸம்வத்ஸரம் முடிவதால் சந்தா பாக்கிகளை வரும் 30-12-42)க்குள் அனுப்பவேண்டும். அசக்தி முதலான அஸௌகர்யமுள்ளவர்கள் அறிவித்தால் அனுப்பவேண்டியதில்லை. சந்தா பாக்கியோ ஸ்ரீமுகமோ அனுப்பாதவருக்கு வரும் ஸஞ்சிகை வி. பி. யில் வரும். திருப்பியனுப்புவது தர்மமாகாது. அனுப்பினால் வி. பி. செலவும் ஸம்ரக்ஷிணீயைச்சேரும். ஒன்றுக்கு பத்துமடங்கான கடிதம் விலைக்கடுமையில் கஷ்டப்படும் ஸம்ரக்ஷிணீக்கு அதிகம் அனுப்புவது உசிதமாயிருக்க, உள்ளதையாவது அனுக்ரஹிக்க திருவுள்ளம் பற்றுவது சள்ளமற்ற காரியமாகும்.

(ஸம்-கர்)

செய்தி.

...ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸம்ஸ்க்ருதபாடசாலை ஆதரவின்கீழ் பெரியோர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீமான் ஆசாரிய தர்ம துரந்தரமல்லூர் நல்லான் சக்ரவர்த்தி சகரவர்த்தி அய்யங்கார் (M. A., Honours) அவர்கள் அக்டோபர்மீ 6உ ஸ்ரீ தர்மஸ்வரூபம் என்கிற விஷயத்தைபற்றி மிக அழகாகவும் தெளிவாகவும் உபந்யஸித்தார். அப்போது ஸ்ரீமான் M. S. திருமலை அய்யங்கார் (சூபரிண்டெண்டிங் இஞ்சினீயர், மதருஸ்) அவர்கள் அக்ராஸனம்வகித்தார். அவ்வரிய உபந்யாஸத்தை கேட்டு ஆனந்தித்த வைதிக லௌகிக மஹான்களின் பிரார்த்தனைக்கு இணங்கி அக்டோபர்மீ 9உ டிப்டிகலெக்டர் ஸ்ரீமான் S. ராகவய்யங்கார் அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் 'சரணாகதி' விஷயத்தைபற்றியும், அக்டோபர்மீ 11உ முதல் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 'ஸ்ரீ பகவத்கீதா' என்கிற விஷயத்தைபற்றியும் உபந்யஸிக்க ஆரம்பித்து ஸ்ரீகீதா மஹாத்ம்யம் முதலாகக் கிரமமாக நவம்பர்மீ 15உ வரையில் மிக அழகாக ஸகல சாஸ்திரார்த்தங்களும் ஸ்ரீ கீதையில் இருப்பதாகத் தெளிவுற விளக்கி உபந்யஸித்தார். பிறகு நவம்பர்மீ 17உ அந்த ஸ்வாமியே ஸ்ரீமத் பகவத் ராமாநுஜன் ஸ்ரீமாந்நிகமாந்த மஹாதேசிகன் இவர்களுடைய வைபவத்தைபற்றி மிக அழகாக அரிய உபந்யாஸம் செய்தார். இந்த ஸ்வாமிக்கு ஸ்ரீ வீரராகவன் பப்ளிதுப்பட்டி மரியாதையுடன் 120 ரூபாய் ஸம்பாவனை செய்யப்பட்டது. பிறகு வக்கீல் ஸ்ரீமான் M. பார்த்ஸாரதி அய்யங்கார் அவர்களால் வந்தனோபசாரம் செய்யப்பட்டு கோஷ்டி கலைந்தது.

தி. ச. வேதாந்த தாஸன்.

வினா விடை.

வினா— பண்டு குளக்கரையில் யானைக்கு நேர்ந்த துயர் யாது?

விடை— ஓர் முதலை அதன் காலைக் கௌவி இழுத்தது. அது அதன் வாய்ப்பட்டு மரிக்கும் ஆபத்தையடைந்தது.

வினா— அடடா! திருமாலடியார் மரணத்திற்கா பயப்படுவர்! அப்படியிருப்பினும் இந்த முதலையை ஓட்ட மூலா முதல்வனே வரவேண்டும்? ஒரு இந்த்ரசந்திரர்கள் போதாதா? அப்படியானாலும் ஸ்ரிய:பதி இருந்த இடத்திலேயே ஸங்கல்பத்தால் முதலையை நிக்ரஹிக்கமுடியாதா?

விடை— சரி, நீங்களேதான் சொல்லவேண்டும்.

வினா— யானை வேண்டியது ஸர்வேச்வரனது திவ்ய சரணாரவிந்தங்களில் செந்தாமரைப்பூவை இடவே! எம்பெருமான் அதற்காகத்தான் அரைகுலையத் தலைகுலைய அவ்விடம் தோன்றியது! ஆனையின் இடரெல்லாம் சாம்புயக் கண்ணனை நேரில் அர்ச்சியாததே!

ப்ரகரித்தது:-பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர், தில்லஸ்தானம். P.O (via) திருவையாறு,
அச்சிட்டது:- S. விஜயராகவன், ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு